விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 064 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 09 செவ்வாய்க்கிழமை (21.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தேர்தலை நடத்தக்கோரி ஆர்ப்பாட்டம்
### போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை, கண்ணீர்ப் புகைவீச்சு



(கொழும்பு)
தேர்தலை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தினைக் கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை 11



## கட்டப்பிராயில் 16 பவுண் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் கட்டப்பிராய் பகுதியில் உள்ள பூட்டியிருந்த வீட்டுக் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 16 தங்கப் பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் 11

# தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது

## தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)
**போதிய நிதி மற்றும் உரிய வசதிகள் வழங்காததால் மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது என தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.**

நகர்த்தல் பத்திரம் ஒன்றினூடாக தேர்தல் ஆணைக்குழு இதனை உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.
தவிர்க்க முடியாத பல தடைகள் காரணமாக மார்ச் 09ஆம் திகதி தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக குறித்த நகர்த்தல் பத் 11

## புகையிரதம் - பஸ் கிளிநொச்சியில் விபத்து
### மூவர் காயம்



(முறிகண்டி)
கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில், யாழ் பல்கலைக்கழகத்துக்கு ஊழியர்களை ஏற்றிச் 11

## அரச அச்சகத்துக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பு பொரளையிலுள்ள அரச அச்சக அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் சிறப்புக் குழுக்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
நூறு இராணுவத்தினரும் ஐம்பது பொலிஸ் உத்தியோகத்தர்களும் வரவழைக்கப்பட்டு விசேட பாதுகாப்புப் பணியில் ஈடு 11

## மல்லாகத்தில் வீடொன்றில் நகைகள் திருட்டு

24 மணி நேரத்தில் மீட்கப்பட்டதோடு சந்தேகநபரும் கைது



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் திரு 11

## அரசின் கடுமையான தீர்மானங்களுக்கு சர்வதேச நாணய நிதியமே காரணம்

### ஐ.தே.க பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன



(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே வரி அதிகரிப்பு உட்பட சில கடுமையான தீர மானங்களை எடுக்க நேரிட்டது என ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.
எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களை இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் 11

## மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில்
### பௌத்த மதத் தலைவர்களுடன் சஜித் விசேட கலந்துரையாடல்



(கொழும்பு)
மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பௌத்த மதத் தலைவர்களுடன் சஜித் பிரேமதாஸ விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். 11

## ஒற்றையாட்சியின் கீழே அதிகாரம் பகிரப்படும்
### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)
இலங்கை ஒற்றையாட்சியுள்ள ஒரு நாடாகும். இதனைக் மாற்றியமைக்க முடியாது. சமஷ்டி மூலம்தான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் எண்ணுவது தவறானது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கர்பவதியின் வயிற்றில் எட்டி உதைந்த சிப்பாய் கைது

(கொழும்பு)

பிறந்தநாள் விழாவின் போது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் எட்டி உதைத்த கடற்படை சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம், கணேமுல்ல அமுனுகொட வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

உதைக்கு இலக்கான நான்கு மாத கர்ப்பிணிப் பெண், பொரளை டி சொய்சா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், உதையால் கரு அழிந்துள்ளதாக வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்திற்குரிய கடற்படை சிப்பாயின் சகோதரி ஒருவரின் வீட்டில் பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றதுடன் அதில் இந்த கடற்படை சிப்பாயும் கலந்து கொண்டார்.

இந்த கடற்படை சிப்பாயின் சகோதரியின் கணவரின் சகோதரர் ஒருவருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகமடைந்த இராணுவ வீரர், தன்னையும் தாக்கியதாகவும், கர்ப்பிணி மனைவியின் வயிற்றில் பல முறை உதைத்ததாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

உதைக்கப்பட்ட கர்ப்பிணி தரையில் வீழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

கர்ப்பிணிப்பெண்ணை உதைத்ததாகக் கூறப்படும் கடற்படைச் சிப்பாய் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-7)

---

## எம் அன்புத் தெய்வத்தின்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**விசுவலிங்கம் நாகேஸ்வரி**



தோற்றம் 16.08.1939

மறைவு 25.02.2019

ஆண்டுகள் மூன்றாகிப் போனதம்மா
அன்னையே நின் முகம் கண்டு
ஆனாலும் - எம்மனம் ஆறவில்லை
அன்பாய் உங்கள் ஒரு புன் முறுவல்
காண்போமா மறுமுறை
அருவமாய் எமை ஆண்டருள்வாய்
இறைவியே...

கும்பிளாவளை மேற்கு,
அளவெட்டி மத்தி அளவெட்டி.

குடும்பத்தினர்.

---

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்

7 வருடங்கள் முகாமைத்துவ
சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி
இன்றிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்

திருமதி

**இரஞ்சினி பிறேம்குமார்**



அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு
நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ
பிறந்த நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (14674)

---



## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)

Reg.No.9583 T.P No : 021 221 4460

## அறிவித்தல்

மேற்படி எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 18.02.2023இல் தலைவர் திரு.அ.டெனிஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அதன் விபரம் வருமாறு,

### 2023ற்கான புதிய நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.இ.விஜயராசா அவர்கள் | தலைவர் |
| 2. | திரு.யோ.றொபின் அவர்கள் | உப தலைவர் |
| 3. | திரு.ம.இளங்கோவன் அவர்கள் | செயலாளர் |
| 4. | திரு.ப.றொபின்றோய் அவர்கள் | உப செயலாளர் |
| 5. | திரு.லீ.றே.இக்னேஸியஸ் சுரேஸ் அவர்கள் | பொருளாளர் |
| 6. | திரு.ச.தியாகராசா அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 7. | திரு.அ.அன்ரன் றெகநாதன் அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 8. | திரு.த.சுகந்தன் அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 9. | திரு.சி.கனகராசா அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 10. | திரு.த.சதீஸ்குமார் அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 11. | திருமதி செ.கோமளேஸ்வரி அவர்கள் | நிர்.உறுப்பினர் |
| 12. | திரு.ந.கோகுலராசா அவர்கள் | போசகர் |
| 13. | திரு.வி.இராமஜெயம் அவர்கள் | போசகர் |

### விசேட அறிவித்தலும் வேண்டுகோளும்

1. எமது சங்கத்தில் பதிவு செய்து அங்கத்துவம் பெற்று தரிப்பிடங்களில் வாடகைச் சேவையிலீடுபடும் ஓட்டோ உரிமையாளர்கள் தமது மாதாந்த சந்தா நிலுவைகளை தவறாது செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளவும். 3 மாத சந்தா நிலுவை மேற்பட்டால் தங்கள் பதிவு மீள்பரிசீலனை செய்யப்படும்.
2. பயணிகள் தமது பயணத்திற்காக ஓட்டோவை வாடகைச் சேவைக்கு அமர்த்தும்போது ஓட்டோ தரிப்பிடங்களில் அமர்த்துங்கள். வாடகைக் கட்டணத்தை உறுதி செய்து பயணியுங்கள். இறங்கும்போது தங்கள் பொருட்களைக் கவனமாக எடுத்துக் கொள்ளுங்கள். கண்ட இடத்தில் ஓட்டோவை அமர்த்தினால் சில அசௌகரியங்களை சந்திக்க நேரிடலாம்.
3. பொதுமக்களுக்கான சேவை மேற்கொள்ளும் ஓட்டோக்களுக்கு வாரத்தில் 10 லீற்றர் எரிபொருள் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென வேண்டிக் கொள்கின்றோம்.

(C-6015) நிர்வாகம்

---

## இணுவில் இந்துவின் கண்ணீர்க் காணிக்கை

பேராசிரியர் அமரர் **இரட்ணம் விக்கினேஸ்வரன்**

[கணிதத்துறைப் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்,
முன்னாள் விஞ்ஞான பீடப் பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்]



எமது பாடசாலையின் பழையமாணவனும், பாடசாலைப் பழைய மாணவர்சங்கம், இணுவில் இந்துக் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய ஆலோசகருமான அமரர் இரட்ணம் விக்கினேஸ்வரன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(14668) இணுவில் இந்துக்கல்வி ஆசிரியர் நலன்புரிக் கழகம், இணுவில் இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், இணுவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் வளர்ச்சியில்
அதீத அக்கறை கொண்ட யாழ்ப்பாண
பல்கலைக்கழகத்தின் முன்னாள்
துணைவேந்தரும் பேராசிரியருமான

அமரர் **இரட்ணம் விக்கினேஸ்வரன்**



அவர்களது இழப்பினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி சமூகம் (14667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்திற்குள் இன்று எதிர்க்கட்சிகள் போராட்டம்

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக் கோரியும் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்துக்குள்ளே மாபெரும் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளன.**

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. மற்றும் சுதந்திர மக்கள் கூட்டணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்தில் இன்று குதிக்கவுள்ளன.

மேற்படி இரண்டு விடயங்களையும் அடிப்படையாக வைத்து நாட்டின் பல்வேறு இடங்களில் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே பாராளுமன்றத்துக்குள்ளும் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. (நி)

# முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தனவிற்கு பிணை



(கொழும்பு)

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, சரண குணவர்தனவை 30,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணையை மார்ச் 23 ஆம் திகதி எடுத்துக் கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது. (நி)

# சிகை அலங்கரிப்பு நிலைய கட்டணங்களும் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பு காரணமாக தென் மாகாணத்தில் உள்ள சிகை அலங்கார நிலையங்களில் (சலூன்களில்) முடி மற்றும் தாடி வெட்டுவதற்கான கட்டணம் 50 மற்றும் 100 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சில சிகை அலங்கார நிலையங்களில் முடி மற்றும் தாடி வெட்டுவதற்கான கட்டணம் 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிகை அலங்கார நிலையங்களில் முடி வெட்டுவதற்கு மாத்திரம் 500 ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகளுக்கு முடிவெட்டுவதற்கான கட்டணமும் 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)

# உ.த. பரீட்சை பெறுபேறுகள் ஜூன் மாதம் வெளியாகும்?

(கொழும்பு)

2022 ஆம் கல்வியாண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான பெறுபேறுகளை எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனை தெரிவித்தார்.

2022 ஆம் கல்வியாண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு கணிசமான ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமை பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த செலவினங்களுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 500 ரூபாய் போதுமானதாக அமையாமையினாலேயே ஆசிரியர்களின் விண்ணப்பம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கோட்டாவின் கதியே ரணிலுக்கும்

## குமார வெல்கம

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்களாணை இல்லாத காரணத்தினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார்.

பொருளாதார பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்திற்கு எதிராக செயற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஏற்பட்ட கதியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

மதுகம நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நவலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

# வங்குரோத்து நிலைக்கு காரணமான ராஜபக்ஷக்கள் அரசியலில் இருந்து விலக வேண்டும்- சந்திரிகா



(கொழும்பு)

எவ்வித வரையறையும் இல்லாமல் அரச நிதியை ராஜபக்ஷ குடும்பம் கொள்ளையடித்தமையே நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லக் காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு அரச தலைவர்கள் சர்வதேசத்திடம் யாசகம் பெறுவதாக குற்றம் சாட்டியுள்ள அவர் தற்போதைய அவலநிலை கண்டு மன வேதனை அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பம் மக்களாணை என குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை தவறாக வழி நடத்தி ஆட்சியை கைப்பற்றி முழு நாட்டையும் சூறையாடியது என சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். மீண்டும் ராஜபக்ஷர்கள் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்தாலும் ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலக வேண்டும் என சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். (நி)

# தேர்தலை ஒத்திவைப்பது அரசியலமைப்பை மீறும் செயல்

## எரான் சாடல்



(கொழும்பு)

தேர்தலை நடத்தப் போவதில்லை என ஜனாதிபதி மறைமுகமாக தெரிவித்துள்ளமை அரசியல் அமைப்பு மற்றும் தேர்தல் தொடர்பான சட்டங்களை மீறும் நடவடிக்கை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டிற்கு சட்டத்தின் ஆட்சி முக்கியமானது என குறிப்பிட்ட அவர், நிர்வாகத்தை சீர்குலைப்பதன் மூலம் சர்வதேச உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் இதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2022 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் 2023ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதற்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

2010 மே மாதத் தேர்தலுக்கான அச்சு செலவுகள் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களுக்குப் பின்னரும் 2015 பொதுத் தேர்தலுக்கான செலவுகள் அந்த வருடம் ஒக்டோபரிலும் 2019 ஜனாதிபதித் தேர்தல் செலவுகள் 8 மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டமையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே, அச்சிடுவதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களும் இருந்தும் முன் கூட்டியே பணம் செலுத்தாமல், வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என அறிவிப்பது, தேர்தலை ஒத்தி வைக்க தடைகளை ஏற்படுத்தும் தந்திரம் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (நி)

# இந்தியாவை விட இரண்டு மடங்காகிய இலங்கையின் மின்சார செலவு

(டில்லி)

இலங்கையில் மின்சார அலகு ஒன்றின் உற்பத்தி செலவு, ஒரு அலகுக்காக இந்தியா செலவிடும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகம் என இந்திய மின்சக்தி அமைச்சின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய இந்தியா 25 இலங்கை ரூபாவை மட்டுமே செலவிடுகிறது.

எனினும் இலங்கை தற்போது ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 52 இலங்கை ரூபாவை செலவிடுகிறது.

இலங்கை தனது மின் உற்பத்திக்காக பெருமளவு நிலக்கரியை நம்பியிருப்பதே இந்த செலவினத்திற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

இலங்கையில் காற்றாலை மின்சாரம் மற்றும் சூரிய சக்தியும் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டாலும், அவற்றின் சதவீதம் குறைவாகவே உள்ளன.

இந்த நிலையில், சூரிய சக்தி, அணுசக்தி, காற்றாலை மற்றும் நிலக்கரி போன்ற பல ஆற்றல் உற்பத்தி ஆதாரங்களின் விகிதாசார பயன்பாடு காரணமாக இந்தியா தனது ஆற்றல் உற்பத்திச் செலவை பெருமளவில் குறைத்துள்ளதாக இந்திய மின்சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் உலகக்கிண்ணம்

# நியூஸிலாந்திடம் தோல்வியடைந்து வெளியேறியது இலங்கை அணி



மகளிருக்கான இருபது-20 உலகக்கிண்ணத் தொடரின் 17 ஆவது லீக் போட்டியில், நியூஸிலாந்து அணி 102 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

பார்ல் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குழு ஏ பிரிவில் நடைபெற்ற போட்டியில், நியூஸிலாந்து அணியும் இலங்கை அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, ம்தலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அமெலியா கெர் 66 ஓட்டங்களையும் பேட்ஸ் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், அச்சினி குலசூரிய மற்றும் ரணவீர ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 163 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 15.5 ஓவர்கள் நிறைவில் 60 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், நியூஸிலாந்து அணி 102 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. அதே வேளை இந்தத் தோல்வியின் மூலம் இலங்கை அணி, அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சாமரி அத்தபத்து 19 ஓட்டங்களையும் மல்ஷா செஹானி 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், அமெலியா கெர் மற்றும் லியா தஹுஹு ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஈடன் கார்ஸொன், ஜெஸ் கெர், ஹன்னா ரோவ் மற்றும் பிரான் ஜோனஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 66 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த அமெலியா கெர் தெரிவு செய்யப்பட்டார். (4)

## ரோட்டர்டாம் பகிரங்க டென்னிஸ்

# மெட்வடேவ் சம்பியன்

ரோட்டர்டாம் பகிரங்க டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் டேனியல் மெட்வடேவ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

2021 ஆம் ஆண்டு அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்ற 27 வயதான டேனியல் மெட்வடேவ்வுக்கு இது 16 ஆவது பட்டமாகும்.

அத்துடன், கடந்த ஒக்டோபரில் வியன்னா பகிரங்க டென்னிஸ் தொடரில் வென்ற பிறகு முதல் ஏடிபி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் டேனியல் மெட்வடேவ், இத்தாலியின் ஜானிக் சின்னரை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 5-7, 6-2, 6-2 என்ற கணக்கில் சின்னரை தோற்கடித்து டேனியல் மெட்வடேவ், சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம், தற்போது உலக அளவில் 11 ஆவது இடத்தில் இருக்கும் மெட்வடேவ், ஏடிபி தரவரிசையில் முதல் 10 இடத்துக்கு முன்னேறுவார். (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2710

### மகிழன்




### சுதர்சினி




### அருண்




### ரியானி




### தினேஸ்




### பிரதீபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் திணைக்களத்தில் 2 ஆயிரம் பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக்களத்தில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அரச சேவையில் ஆட்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதால் அத்தியாவசிய சேவைக்காக அரச சேவையில் உள்ளவர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

218 பேருக்கு பதவி உயர்வு வழங்கி அவர்களுக்கான பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உள்ளக ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# 13 ஐ அமுல்படுத்துவதன் மூலமே பிரிவினையற்ற தேசமாக மாற்றலாம்

## கல்வி இராஜாங்க அமைச்சர்

**(கொழும்பு)**

**13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதன் மூலமாகவே தேசிய ரீதியில் பிரிவினையற்ற தேசமாக இலங்கையை தக்கவைத்துக் கொள்ள முடியும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.**

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள சர்ச்சை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் அரசியல் சமூக, சமய, கலை, கலாசார விழுமியங்களோடு சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

அந்தவகையில் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு மட்டுமன்றி, முழு நாட்டுக்கும் ஏற்ற வகையிலானதாகவே அமைந்துள்ளது. அரசியலமைப்பை மாற்றி, புறக்கணித்து அல்லது கொச்சைப்படுத்தி அதனூடாக நாட்டை குட்டிச்சுவராக்கும் எண்ணம் துளியளவும் கிடையாது என்பதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகத் தெளிவுபட கூறியுள்ளமை எமக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருவதாகவுள்ளது.

நாடு கடந்து வந்த சிக்கல்கள், அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி தற்போது படிப்படியாக குறைந்து தற்போது ஒரு சுமுகமான நிலையில் நாட்டின் பொருளாதாரம் தக்க வைக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் தங்களின் சுயலாபத்துக்காக மக்களை திசை திருப்பும் நோக்கம் ஒரு நாளும் கைகூடாது.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையில் அதில் குற்றம் கண்டுபிடிப்பதோ அல்லது அது தேவையில்லை என்ற தொனியில் பேசுவதோ எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. சட்டங்கள் வகுக்கப்படுவது நாட்டு மக்களின் நன்மையை கருத்திற் கொண்டேயொழிய தனிப்பட்டவர்களின் நலனுக்காகவோ அல்லது இனவாதம் பேசும் அரசியல் கட்சிகளின் நன்மைக்காகவோ இல்லை.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் பின் எட்டு திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு சட்டமாக அங்கீகரிக்கப்பட்டு தற்போது அது 23 வரை வந்துள்ளது.

புதிய திருத்தச்சட்டங்கள் கொண்டுவரப்படும் போது மௌனியாக இருந்தவர்கள சுமார் 40 வருடங்களுக்கு பிறகு அதனை விமர்சனம் செய்வதோ அல்லது அதனை எமது அரசியலமைப்பில் இருந்து நீக்குவதற்கு எத்தனிப்பதோ பாரதூரமான சிக்கல்களுக்கும் சர்வதேச ரீதியிலான விரிசல்களுக்கும் வித்திடும் என்பதே வெளிப்படை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வர்த்தக நிலையம் உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் ஏ9 வீதி அருகாமையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றினை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை வர்த்தக நிலையத்தை உரிமையாளர் திறந்த போதே மேற்கூரையை பிரித்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் ஆகியன திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்போது வர்த்தக நிலையத்தினுள் இருந்த பணம் மற்றும் பெறுமதியான புகையிலைசார் உற்பத்திப் பொருட்கள் ஆகியனவே திருட்டுப் போனதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த திருட்டுச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## ஆர்ப்பாட்டங்களின் போது

# பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தினால் சட்ட நடவடிக்கை- நிஹால்தல்துவ

(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்களின் போது பொதுமக்களுக்கு, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் செயற்பட்டால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால்தல்துவ இதனை தெரிவித்தார்.

மொழி மற்றும் கருத்துச் சுதந்திரம் காணப்படுகின்ற நிலையில், அவற்றுக்கு பொலிஸாரால் எந்தவித தடையும் ஏற்படுத்தப் போவதில்லை.

எனினும் சட்டத்திற்கு முரணாக செயற்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

21.02.2023
மாசி 09, செவ்வாய்க்கிழமை
பிரதமை முற்பகல் 11.43 மணிவரை

சதயம் முற்பகல் 11.29 மணிவரை
சுபநேரம் 11.01-12.31 மணிவரை
இராகுகாலம் 3.31-5.01 மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயில்யம், மகம்

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


கடகம்

உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.


துலாம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


மகரம்

வாக்கு மேன்மையுண்டு, பொது வாழ்வில் பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


ரிஷபம்

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழிச் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பாராட்டும் புகழும் கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.


கும்பம்

உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.


மிதுனம்

எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வழிபாடு மகத்துவம் தரும், பகையொன்று நட்பாகலாம், பயணங்கள் கைகூடும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர்.


கன்னி

தொழிலில் எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தேகநலனில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமுயற்சி தோல்வியை வெற்றியாக மாற்றுகிறது.

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு சாத்தியமற்ற விடயம்- சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

அதிகாரப்பகிர்வு என்பது இலங்கையின் ஒற்றையாட்சிக்குள் சாத்தியமற்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்தியாவின் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜீன் சம்பத்துடனான நேற்றைய சந்திப்பின் போது தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இருப்பதாக இந்தியாவிற்கு இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதாக அர்ஜீன் சம்பத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள 30 விடயங்கள் தற்போது நீதிமன்றம் ஊடாக நீக்கப்பட்டுள்ளது. இப்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க இலங்கை ஜனாதிபதி இவ்வாறு சொல்வார் பிறகு நீதிமன்றங்கள் ஊடாக வழக்குகள் தொடுத்து எல்லாவற்றையும் அவர்கள் மீளப் பெற்றுக் கொள்வார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் விளைவினால் 13 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 35 வருடங்களுக்கு மேலாகிறது. சர்வதேச ஒப்பந்தத்தை இலங்கை அரசுகள் நீதிமன்றம் ஊடாக பறித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் உள்ள இனங்களை அடிப்படையாகக் கொண்டு பகிரப்பட்டுள்ள முறைமை போன்று இலங்கையிலும் நடைமுறைப்படுத்த இந்திய அரசு முனைப்பு காட்ட வேண்டும். அவ்வாறு வழங்கப்படுகின்ற அதிகாரப் பகிர்வு மீளப் பெற



முடியாததாகவும் தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் இருக்க வேண்டும்.

இந்தியாவின் உண்மை நண்பர்கள் ஈழத்தமிழர்கள் தான். ஈழத்தமிழர்களின் பாதுகாப்புத் தான் இந்தியாவின் பாதுகாப்பையும் மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17.மார்ட்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் "கலைஞான சுரபி" தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால இயக்குநர்களில் ஒருவரும் ஊறணி பங்குத்தந்தையுமான அருள்பணி தி.இ.தேவராஜன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 01 ஆம் 02 ஆம் திகதிகளிலுமாக நான்கு நாட்களுக்கு "குருதி கழுவிய குவலயம்" என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.(4-6)

# நீதிமன்ற அவமதிப்பு
## பெண் ஒருவர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நடவடிக்கையின் போது இடையூறாக செயற்பட்ட பெண் ஒருவர் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வேளை போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபரை பார்க்க அவரது தாயார் வந்துள்ளார். அவர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக மகனை சந்திக்க முற்பட்டுள்ளார்.

அந்த பெண்ணை அமைதி பேணுமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எனினும் அவர் சத்தமிட்டதனால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தை புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பெண் மீது வழக்குத் தொடரப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்ற மேலதிக நீதவான் சந்தேக நபரை வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (4-6-33)

## விபத்தில் உயிரிழந்த மகனின்
# சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர்கள் யாழ்.போதனாவில் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் உயிரிழந்த தமது மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர் யாழ். போதனா மருத்துவமனைக்கு அதிதிகளாக வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சடுதியான இறப்பின் பின்னர் சிறுநீரகம் போன்ற உறுப்புகளை தானம் செய்வதனால் அவதியுறும் இன்னொருவருக்கு உயிர் வாழ சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அந்த வகையில் மேற்படி சிறுநீரக தானத்தை பெற்றோரின் ஒப்புதலுடன் அவர்கள் விருப்பத்தின் பெயரில் இன்னொருவருக்கு வழங்கியமையால் சிறுநீரக செயலிழப்பினால் அவ



தியுற்ற ஒருவர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் இன்று சுகமாக வாழ்கின்றார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த பெற்றோர்கள் அண்மையில் மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு அவர்களினால் சிறுநீரக குருதி சுத்திகரிப்பு பிரிவில் விரிவாக்கம் செய்யப்பட்ட மேலும் 3 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திர பகுதி திறந்து வைக்கப்பட்டது. (4-6-33)

# பிரதான வீதியில் பாரிய குழி
## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காரைநகர் 782 இலக்க வழித்தட வீதியில் 4 அடி ஆழத்திலும் 6 அடி நீளத்திலும் 3 அடி அகலத்திலும் பாரிய குழி ஒன்று உள்ளது.

இந்த குழியானது மூளாய் பிள்ளையார் கோவிலில் இருந்து 150 மீற்றர் வடக்குப் பக்கமாக உள்ளது.

இந்த குழிக்கு எந்தவிதமான பாதுகாப்பு காட்சிப் பதாகைகளோ அல்லது அடையாளங்களோ வைக்கப்படாமல், குழியானது வீதியின் அரைவாசி பகுதியில் நீண்டவாறு உள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு தொடங்கும் போது கீழே குழாய் புதைப்பதற்கு இந்தக் குழியை தோண்டியுள்ளனர்.

இருப்பினும் ஒரு வருடத்திற்கு மேலாக எந்தவிதமான புனரமைப்புகள் செய்யப்படவுமில்லை. பாதுகாப்பு எச்சரிக்கைகள் போடப்படவுமில்லை.

ஆகையால் இந்த வீதியில் பயணம் செய்பவர்கள் உயிரை கைகளில் பிடித்தவாறு பயணம் செய்கின்றனர்.

அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இந்த வீதியில் பயணம் செய்யும்போது வாகனங்கள் விரைவில் சேதமடைகின்ற சம்பவங்கள் பல இடம்பெறுகின்றன.

இது தொடர்பில் பொதுமக்கள் அசௌகரியத்தை தெரிவித்து வருகின்றனர். (4-6-104)

# போதை கலந்த பாக்கை விற்பனை செய்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில், மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் கலந்த பாக்கு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் கலந்த பாக்கு விற்பனை செய்யப்படுவதாக கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை மடக்கி சோதனை செய்த போது, 750 கிராம் போதை கலந்த பாக்கு உடைமையில் இருந்து மீட்கப்பட்டது.

அதனை அடுத்து சந்தேக நபரை கைது செய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

# சிறுதானிய செய்கையில் ஈடுபட விரும்புவோர் விபரங்களை சமர்ப்பிக்கவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு ஒட்டுவெளி வயல் பரப்பில் சிறுதானியச் செய்கையில்(உளுந்து, பயறு, கௌபி) ஈடுபட விரும்புவோர் நாளை 22 ஆம் திகதிக்கு முன்னர் விபரங்களை சமர்ப்பிக்குமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர். இது தொடர்பாக எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப் பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவிக்கையில் காலபோக அறுவடையின் பின்னரான சிறுதானிய செய்கையில் ஈடுபட எதிர்பார்த்திருப்பவர்கள் 22 ஆம் திகதிக்கு முன்பாக செய்கை மேற்கொள்ளவுள்ள தானியவகை, பரப்பளவு உள்ளிட்ட விபரங்களை கமக்கார அமைப்பின் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். (4-6-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரேசிலில் கனமழைக்கு 24 பேர் பலி பல இடங்களில் நிலச்சரிவு

(சாங்பவுலோ)

பிரேசில் நாட்டில் தென்கிழக்கு கடற்கரையோர பகுதிகளில் கடந்த சில நாட்களாக கன மழை கொட்டி வருகிறது.



இடைவிடாமல் பெய்து வரும் மழையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. சாங்பவுலோ மாகாணத்தில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாக காட்சி அளிக்கிறது.

வெள்ளத்தில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட இதுவரை 24 பேர் பலியாகி விட்டனர். இந்த பேய் மழைக்கு கடற்கரையோர பகுதிகள் கடுமையான சேதத்தை சந்தித்து உள்ளது. மீட்புப் பணிகள் இங்கு முடக்கி விடப்பட்டுள்ளது. குடிநீர் மற்றும் போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. அவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். தொடர் மழையால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (நி)

# சுறா தாக்கி சுற்றுலாப் பயணி பலி

(பாரிஸ்)

பிரான்ஸின் பசுபிக் பிராந்தியமான நியூ கலிடோனியாவில் பார்வையாளர்கள் முன்னிலையில் சுறா தாக்கி, சுற்றுலாப் பயணி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

59 வயதான அவுஸ்திரேலிய சுற்றுலா பயணி, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நௌமியாவில் உள்ள பிரபலமான கடற்கரையில், கரையிலிருந்து சுமார் 150 மீ (500 அடி) நீந்திக் கொண்டிருந்த போது, சுறா தாக்கி, அவர் உயிரிழந்தார்.

சுறா பலமுறை கடித்து, கால் மற்றும் கைகளில் பலத்த காயம் அடைந்து, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மூன்று வாரங்களில் சாட்டோ- ரோயல் கடற்கரைக்கு அருகில், இது மூன்றாவது சுறா தாக்குதல் ஆகும்.

அருகில் பயணித்த இரண்டு பேர் அந்த நபரை மீண்டும் கடற்கரைக்கு அழைத்து வந்து, அவசர சேவைகள் உதவியுடன் அவரை மீட்க முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை. (நி)

# இரு ஏவுகணைகளை பரிசோதித்தது வடகொரியா

(பியாங்யாங்)

வட கொரியா பயிற்சி நடவடிக்கையாக இரு ரொக்கெட்களை நேற்று திங்கட்கிழமை ஏவியுள்ளது. ரொக்கெட் லோஞ்சர் ஒன்றை சோதிப்பதற்கான பயிற்சியாக இந்த ரொக்கெட்டுகள் ஏவப்பட்டுள்ளன.

எதிரிகளின் வான் தலங்களை அழித்துவிடக்கூடிய அணு வாயுத தாக்குதல்களை நடத்தக் கூடிய வலிமை இந்த ரொக்கெட் லோஞ்சருக்கு உள்ளது என வடகொரியா தெரிவித்துள்ளது.

கண்டம்விட்டு கண்டம் பாயும் பாரிய ஏவுகணையொன்றை கடந்த சனிக்கிழமை வடகொரியா பயிற்சிக்காக ஏவியிருந்தது. ஜப்பானின் பிரத்தியேக பொருளாதார வலய கடற்பகுதியில் இந்த ஏவுகணை இறங்கியதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இரு நாட்களின் பின்னர், நேற்று இரு ரொக்கெட்களை வட கொரியா ஏவியுள்ளது. (நி)

# 6 செ.மீ வாலுடன் பிறந்த குழந்தை மருத்துவர்கள் ஆச்சரியம்

(பிரேஷிலியா)

பிரேசில் நாட்டின் பெண் ஒருவருக்கு 6 சென்ரி மீற்றர் வாலுடன் ஒரு குழந்தை பிறந்து பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் கர்ப்பிணியாக இருந்த நிலையில் அவர் சமீபத்தில் மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்த நிலையில் முதுகுக்கு கீழே ஆறு சென்ரி மீற்றர் நீளத்தில் ஒரு வால் இருந்துள்ளதை பார்த்து மருத்துவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

உலகில் ஏற்கனவே வாலுடன் சில குழந்தைகள் பிறந்து இருந்தாலும் பிரேசில் நாட்டில் இவ்வாறு குழந்தை பிறப்பது முதல் முறை என்று கூறப்படுகிறது.

ஆறு சென்டி மீற்றர் நீளமுள்ள வால் எந்த விதமான அசைவும் இல்லாத நிலையில் அந்த வாலில் உணர்ச்சிகள் இருந்ததாகவும் அதை ஊசியால் குத்திய போது குழந்தை அழுததாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

முதுகுத் தண்டு வளர்ச்சியடையாமல் இருந்தால் இது போன்று வாலுடன் குழந்தை பிறக்கும் என மருத்துவர்கள் இது குறித்து விளக்கம் அளித்துள்ளனர். (நி)


## மணிவிழா நாயகியை மனமார வாழ்த்துகின்றோம்



யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் (உப அதிபர்)

திருமதி. பாரதிதேவி சற்குணநாதன்

(B.A,Sp.Trd.Science)

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் | - 28.11.1989 - 01.02.1993 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | - 02.02.1993 - 01.01.1995 |
| யா/கன்னியர் மடம் ம.வி | - 02.01.1995 - 05.10.1997 |
| யா/வேலணை கிழக்கு ம.வி | - 06.10.1997 - 31.12.2000 |
| யா/திருக்குடும்ப கன்னியர் மடம் | - 01.01.2001 - 15.06.2010 |
| யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் | - 16.06.2010 - 20.02.2023 |

இடைவிடாத சேவையினை இங்கிதமே நிறைவேற்றி
இக்கட்டான வேளையிலும் பாடசாலைப் பணியினை செவ்வனே வழிநடத்தி
கடமையினைக் கண்ணுங்கருத்துமாய்க் காத்து
அன்பினால் எம்மை அரவணைத்த,
எம் ஆசான் பாரதிதேவி வைரம் போல் என்றென்றும்
வாழ்வாங்கு வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம்.
வாழிய பல்லாண்டு வாழியவே!!

Best Wishes

(14636)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 108





### இருபத்து நான்காம் அத்தியாயம்
### காக்கையும் குயிலும்

இரவெல்லாம் கட்டையைப் போல் கிடந்து தூங்கிவிட்டுக் காலையில் சூரியன் உதித்த பிறகே வந்தியத்தேவன் துயிலெழுந்தான். விழித்துக் கொண்ட பிறகும் எழுந்திருக்க மனம் வராமல் படுத்திருந்தான்.

மேலக்காற்று விர்ரென்று வீச, மரஞ்செடிகளின் கிளைகளும் இலைகளும் ஒன்றோடொன்று உராய்ந்து 'சோ' என்ற சத்தத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. அந்தச் சுருதிக் கிணங்க, ஓர் இளம் பிள்ளையின் இனிய குரல் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடலைப் பண்ணுடன் பாடியது.

“பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!”

இதைக் கேட்ட வந்தியத்தேவன் கண்ணை விழித்துப் பார்த்தான். அவனுக்கெதிரே பூந்தோட்டத்தில் கொன்னை மரங்கள் சரஞ்சரமாகப் பொன் மலர்களைத் தொங்கவிட்டுக் கொண்டு காட்சியளித்தன.

சேந்தன் அமுதன் ஒரு கையில் குடலையும் இன்னொரு கையில் அலக்கும் வைத்துக் கொண்டு, வாயினால் பாடிக் கொண்டே, கொன்றை மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தான். அதிகாலையிலே எழுந்து ஸ்நானம் செய்து திருநீறு புனைந்திருந்த சேந்தன் அமுதன், சிவபக்தனாகிய மார்க்கண்டனைப் போல் தோன்றினான்.

இப்படி இனிமையாகவும் அழகாகவும் பாடும் பிள்ளையின் குரலைக் கேட்க அவனுடைய அன்னை கொடுத்து வைக்கவில்லையே என்ற எண்ணத்துடன் வந்தியத்தேவன் எழுந்தான். அமுதனைப் போல் தானும் பூந்தோட்டம் வளர்த்துச் சிவ கைங்கரியம் செய்து கொண்டு ஏன் ஆனந்தமாய்க் காலங் கழிக்கக் கூடாது? எதற்காகக் கையில் வாளும் வேலும் ஏந்திக் கொண்டு ஊர் ஊராக அலைய வேண்டும்? எந்த நேரமும் பிறரைக் கொல்லுவதற்கும் பிறரால் கொல்லப் படுவதற்கும் ஆயத்தமாக ஏன் திரிய வேண்டும்? இத்தகைய எண்ணங்கள் அவன் மனத்தில் உதித்தன.

ஆனால் சிறிது நேரத்தில் மனம் மாறியது. சேந்தன் அமுதனைப் போல் உலகில் எல்லாருமே சிவ பக்தர்களாயிருந்து விடுவார்களா? திருடர்களும் கொள்ளைக்காரர்களும் வஞ்சகர்களும் எளியவர்களைத் துன்புறுத்துவதில் களிப்படைகிறவர்களும் இருக்கத்தான் இருப்பார்கள்.

இவர்களையெல்லாம் அடக்கி, நியாயத்தையும் தர்மத்தையும் நிலைநாட்ட அரசாங்கம் வேண்டும். அரசாங்கம் நடத்த அரசர்களும் அமைச்சர்களும் வேண்டும். இவர்களுக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேளக்காரப் படைகளும் வேண்டும். தன்னைப் போல் அரசர்களும் ஓலை கொண்டு போகவும் ஆட்கள் வேண்டும்.

ஆம்! இன்று சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்த்தே தீர வேண்டும். பெரிய பழுவேட்டரையர் திரும்பி வருவதற்குள் சக்கரவர்த்தியைப் பார்த்தால்தான் பார்த்தது. அவர் வந்து விட்டால் அது சாத்தியமில்லாமலே போகலாம்.

பூந்தோட்டத்துக்குப் பக்கத்திலேயிருந்த தாமரைக் குளத்தில் குளித்து விட்டு வந்து, வல்லவரையன் ஆடை ஆபரணங்கள் அணிந்து தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டான். சக்கரவர்த்தியைத் தரிசனம் செய்யப் போகும் போது சாதாரணமாகப் போகலாமா? இதற்காகத் தான் அலங்கரித்துக் கொண்டானா, அல்லது பழுவூர் இளையராணியை அன்று மீண்டும் பார்க்கப் போகிறோம் என்கிற எண்ணமும் அவன் மனத்திற்குள் இருந்ததா என்று நாம் சொல்ல முடியாது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### உலக்கை பூஜை

(நேற்றைய தொடர்ச்சி)

“ஐயா நான் இப்போது வேடிக்கைகாகச் சொல்லவில்லை. உண்மையாகவே சொல்கிறேன். அந்த ஆருடப் பிராமணன் சொன்னது வாஸ்தவமே. ஆசனத்தில் குளிர்ச்சி கண்டால் அது சாவுக்கு அடையாளம்தான். ஆனால் வேறு காரணத்துக்காக ஆசனம் குளிர்ந்து போவது உண்டு.

அதைக் கவனித்து அறிய வேண்டும். தண்ணீரிலும் சேற்றிலும் விழுந்ததால் இருப்பிடம் குளிர்ந்தால் அது இறப்புக்கு அறிகுறியாகாது.

தண்ணீர் பட்டு நனைந்து போவதில் அதிசயம் என்ன இருக்கிறது? ஆகவே நீங்கள் வேறு எதையோ எண்ணி விணாகக் கலங்கிக் கொ.ண்டிருக்க வேண்டாம்.

தண்ணீரிலோ, சோற்றிலோ விழாமலும் வேறு காரணங்களால் நனையாமலும் இருக்கும் போது ஆசனத்தில் சீதம் கண்டால், அப்போதுதான் உயிருக்கு ஆபத்து வந்து விட்டது என்று அச்சப்பட வேண்டும். மற்றதற்கெல்லாம் பயந்து சாவது அபத்தம்” என்றான் அசங்கதன்.

அவன் அவ்வாறு சொன்ன வார்த்தைகள் குருசுவாமிக்கு மிகவும் ஆறுதலையளித்தன. அதற்குப் பின் அவர் பல நாள் ஓரளவு நிம்மதியாக இருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

#### இறுதி யாத்திரை

ஒரு நாள் இரவு வெளியே நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அதற்கு நடு ஜாம நேரத்தில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார் பரமார்த்த குரு.

அந்த மடத்தின் மேல் கூரையிலே ஓரிடத்தில் சற்று ஒழுக ஆரம்பித்தது. மழைத் துளி குருவின் படுக்கையில் விழுந்து கொண்டிருந்து. அவரது ஆசனத்துக்குப் பக்கத்தில் படுக்கையில் விழுந்த மழைத் துளிகள் கொஞ்சம் கொஞ்சமாக ஈரமாக்கிக் கொண்டிருந்தன.

நல்ல உறக்கத்தில் இருந்த குருவுக்கு மழை பெய்ததோ படுக்கையில் ஒழுகியதோ, ஏதும் தெரியாது. மழை முற்றுமாக நின்று விட்ட போது மழைத் துளிகள் விழுவதும் நின்றுவிட்டன. ஆனால் படுக்கையில் ஈரம் போகவில்லை.

குருநாதர் தம்மை மறந்து குறட்டை விட்டபடி படுக்கையில் உருண்டு புரண்டு படுத்துக்கிடந்தார். நனைந்திருந்த படுக்கை அவர் ஆசனத்துக்கு அருகே ஆடைகளில் ஈரத்தை ஏற்படுத்திவிட்டது.

'ஜில்' லென்று உறைந்ததும் திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டார் பரமாார்த்தகுரு.

ஜில்லிட்ட இடத்தில் தொட்டுப் பார்த்தார். அப்படியே திடுக்கிட்டுப் போய், எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

ஆசனத்தில் சீதமாகி இருக்கிறதே! ஆபத்து வந்து வட்டதே! என்ற அவதி அவரை அலைக் கழித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களைச் சகிக்க கற்றுக்கொள்கிறோம். - மார்க் ட்வைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அவல மரணங்கள் மலிந்த நாடாக...

எங்கும் வறுமை. எங்கும் பஞ்சம். எங்கும் பசி. இதுவே இலங்கைத் திருநாட்டின் இன்றைய நிலை.

ஆம், பொருளாதார நெருக்கடி காரணமாக ஏழை மக்கள் மிகப் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதிலும் ஒருவேளை பசியாறுவதற்கே முடியவில்லை எனும்போது, உயிரை மாய்த்து விடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற அபத்தமான முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

இதன் காரணமாக, அவல மரணங்கள் மலிந்த பூமியாக இலங்கைத் திருநாடு ஆகிவிட்டது.

உண்மை. இந்த நாட்டில் ஒவ்வொரு நாளும் இடம்பெறும் அவல மரணங்களைப் பார்க்கும்போது, இலங்கை தரித்திர நாடாகிவிட்டதோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

விபத்து மரணங்கள், தற்கொலைகள், கொலைகள், மர்ம மரணங்கள் என தினந்தோறும் அவலச் சாவுகள் மலிந்து கொண்டிருக்கின்றன.

ஏழ்மையான சிங்களத் தாய் ஒருவர் தன் பிள்ளைகளின் பசிபோக்குவதற்காக பலா மரத்தில் ஏறி, பலாக்காய் பறிக்க முற்பட்ட போது, தவறிவிழுந்து உயிரிழந்த சம்பவம் இந்த நாட்டில் உள்ள ஊடகங்கள் முழுவதினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்தோ! கொடுமையிலும் கொடுமை. தன் பிள்ளைகளின் பசியைப் போக்கும் பொருட்டு ஒரு தாய் பலாமரம் ஏறித் தவறிவிழுந்து உயிரிழப்பதென்பது எத்துணை கொடுமையானது.

இக்கொடுமை கண்டு மனித குலம் ஐயகோ! என்று கதற வேண்டாமோ!

மதவாதம், இனவாதம் பேசுகின்ற பௌத்த பிக்குகளின் கல் மனங்களைக் கசியச் செய்ய வேண்டாமோ.

என் செய்வது ஈனர்களும் இரக்கமற்றவர்களும் நாட்டில் கோலோச்சினால், அவல மரணங்கள் மலியும். பசியும் பஞ்சமும் மக்களை வாட்டும். மகாஇலட்சுமி நாட்டை விட்டு வெகுதூரம் சென்று விடுவாள். அந்த நிலை இலங்கைக்கு வந்துவிட்டது. இதை உணர்த்துவதே அவல மரணங்களாம்.

ஆகையால், பெரஹராவிலும் சுதந்திர தினக் கொண்டாட்டத்திலும் மூழ்கிக் கிடக்கும் மூக்கர்களே! வறுமையால் உயிர் போகும் பரிதாபத்தை அறியாமல் இருப்பது உங்கள் ஆட்சிக்கு அழகா! நாட்டுக்கு அழகா! என ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

கூடவே, விபத்து மரணங்கள் இல்லாத நாளே இல்லை என்று கூறுமளவுக்கு தினந்தோறும் நடக்கின்ற விபத்து மரணங்கள் பற்றி ஒரு கணமேனும் சிந்தித்துப் பாருங்கள்.

இதைச் சிந்திக்காதவிடத்து இந்நாடு நரகமாய் மாறுவது வெகுதொலைவில் இல்லை என்பதுதான் உண்மை.

# ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸாரிடம் சிக்கிய இளைஞரின் தொலைபேசிக்கு

## ஐஸ் போதைப் பொருள் கேட்டு ஒரு மணி நேரத்தில் 50 பேரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு

(கொழும்பு)

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞனிடம் சுமார் 50 பேர் ஐஸ் போதைப் பொருளைக் கேட்டுதொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக ஹலவத்த உடப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய குறித்த இளைஞன் கைது செய்யப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் இந்த அழைப்புகள் வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த இளைஞனிடம் போதைப் பொருள் கேட்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அழைப்பு விடுத்ததாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இதையடுத்து சந்தேக நபருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து ஐஸ் போதைப்பொருளை கேட்டதாக கூறப்படும் நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ம-7)

### கோண்டாவில் சந்தியில்

## பல்கலைக்கழக மாணவனின் மோ.சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவனின் மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளமை தொடர்பில் அதனை கண்டுபிடிக்க பொது மக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் சந்தியில் சிவராத்திரிதினத்தில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவனினால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மோட்டார் சைக்கிளின் விவரத்தை பகிரங்கப்படுத்தி அதனை அடையாளம் கண்டுகொண்டால் தகவல் வழங்கி உதவுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-7)

### இலங்கையின் முதலாவது

## புலம் பெயர் பறவைகள் பூங்கா திறந்து வைப்பு

(கொழும்பு)

கண்டி ஹந்தானையில் நிர்மாணிக்கப்பட்ட நாட்டின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சூழல் சுற்றுலா வலயத்தை நேற்று காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார்.

ஹந்தானை தேயிலை அருங்காட்சியக வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த 27 ஏக்கர் பரப்பிலான, சர்வதேச பறவை பூங்கா மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா வலயம், நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பறவைகளின் இருப்பிடமாக உள்ளது.

490 மில்லியன் ரூபாய் செலவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இப்பறவை பூங்காவில் வெளிநாட்டுப் பறவைகள் பெரிய கூடுகளில் பராமரிக்கப்படுவதோடு, அவற்றைப் பராமரிப்பதற்கு சுமார் நூறு பணியாளர்களும் உள்ளனர்.

40 வருடகால இலங்கையை பூர்வீகமாகக் கொண்டிராத பறவைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் இந்த பூங்கா நிறுவப்பட்டுள்ளது. பல வெளிநாட்டுப் பறவைகள் இலங்கையில் இனப்பெருக்கம் செய்ய முடிந்திருப்பது விசேட அம்சமாகும். முதற்கட்டமாக, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு புலம்பெயர்ந்த பறவைகளைப் பார்ப்பதற்கான வசதிகள், விலங்கியல் மாணவர்களுக்கான கல்விப் பயிற்சி மையம், பறவைகள் சரணாலயம், பறவைகள் இல்லம் மற்றும் தனிமைப்படுத்தல் பிரிவு என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### சுண்டிக்குழி சோமசுந்தரம் வீதியில்

## பெண்ணை தாக்கமுற்பட்டவர் அயலவர்களால் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தனிமையில் இருந்த பெண் ஒருவரை தாக்க முயன்றவர் அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக் காலை சுண்டிக்குழி சோமசுந்தரம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பிரஸ்தாப பெண்ணின் சொத்து தொடர்பில் அவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் குறித்த பெண்ணை அச்சுறுத்தி வந்த நிலையில், நேற்றுக்காலை வேளை இனந்தெரியாத நபர் ஒருவர் குறித்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பிரஸ்தாபப் பெண்ணை தாக்க முற்பட்டுள்ளார்.

இதன் போது குறித்த பெண்கூக்குரலிடவே அங்கு திரண்ட அயலவர்கள் சம்பந்தபட்டவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை தனக்கு அச்சுறுத்தல் இருப்பது பற்றி பிரஸ்தாப பெண் யாழ்ப்பாணப் பொலிஸில் பல தடவைகள் முறையீடு செய்தும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கே.எம்.கே கடல் உணவு (பிரைவேட்) லிமிடெட், மூளாய் கப்பூது, தில்லையம்பலம், யாக்கரு நூலகம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாளவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சிதம்பரபுரத்திலும்,

நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** நாவற்குழி லிங்கூஷ்ரெடி மிக்ஸ், அறுகுவெளி, நாவற்குழி, கோகிலா கண்டி மாங்களா பட்டறை, கோகிலா கண்டித்துறை, மறவன்புலவு, கேரை தீவு வீதி, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிர தேசத்தில்** கனகராயங் குளம், ஆலங்குளம் (புதுவிளான்), கறுப் புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான் குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புது விளாங்குளம் சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிர தேசத்தில்** சிதம்பரபுரத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை குருநகர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 21, 23, 26 மற்றும் 27 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்,சோலை வரிவழங்கல், பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதன வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5 வீதம் கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே குறித்த நடமாடும் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்பாடற்ற நிலையில் பேருந்து நிலையங்கள்

## பொது அமைப்புகள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி, முழங்காவில் பேருந்து நிலையங்களுக்குள் பேருந்துகள் வருகை தருவதில்லை என பொது அமைப்புகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரியில் முழங்காவிலிலும் பெருமளவு நிதியில் பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்ட நிலையில் ஏ-32 சாலை வழியாக யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் இடையில் நடைபெறுகின்ற பேருந்து சேவைகளின் போது சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் பேருந்து நிலையங்களுக்குள் வருகை தராமல் முழங்காவில் பூநகரி நகரங்களில் உணவகங்களின் முன்னால் நிறுத்தப்படுகின்றன.

எனவே இது தொடர்பாக பூநகரி பிரதேச செயலாளர், பூநகரி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (4-6-350)



சுழிபுரம் - தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவு மருத்துவமனைக்கு சுழிபுரத்தினை பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வரதராஜா மற்றும் அவர்களது குடும்பத்தினரால் 5 இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் மருந்துப் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்-கஜிந்தன்)

# கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

'Care Givers' கற்கை நெறி (NVQ Level-3), NAITA நிறுவனத்துடன் இணைந்து வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இக்கற்கை நெறி தொடர்பான தகவல் வழங்கும் செயலமர்வு நாளை 22 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பாராட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக தகவலுக்கு 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# உறவுகளின் போராட்டம் 7 ஆவது ஆண்டை எட்டியது

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 6 ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற நிலையில் அதை நினைவுபடுத்திய போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**






வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது நேற்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைந்து ஏழாவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

இந்த நிலையில் குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருடங்களை நினைவுபடுத்து முகமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கந்தசாமி கோவில் முன்பாக இருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரை A9 வழியாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெற்றோர் கறுப்புக் கொடிகளை ஏந்தி அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.(4-6-315-316)

# பேரணியில் கலந்து கொண்ட 7 பேருக்கும் பிணை வழங்கியது மன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி பயணித்த பேரணியில் கலந்து கொண்ட குற்றச்சாட்டில் எம்.கே சிவாஜிலிங்கம், வி.மணிவண்ணன், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், வேலன் சுவாமிகள் உள்ளிட்ட 7 பேருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி கண்டன பேரணி இடம்பெற்றது.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாண பொலிஸாரினால், யாழ். நீதவான் நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த 7 பேருக்கும் நீதிமன்றினால், நேற்றைய தினம் திங்கட்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு மன்றினால் அழைப்பாணை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 280 |
| தக்காளி | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 |
| கோவா | 80 | 70 | 100 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 160 | 150 |
| வாழைக்காய் | 160 | 180 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 - |
| பெரிய வெங்காயம் | 150 | 170 | 150 |
| பாகற்காய் | 300 | 500 | 450 |
| வெண்டக்காய் | 350 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 |
| பயற்றங்காய் | 400 | 650 | 500 |
| லீக்ஸ் | 260 | 280 | 250 |
| பீற்றூட் | .160 | 200 | 150 |
| கறிமிளகாய் | 650 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 350 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 180 |
| முள்ளங்கி | 80 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 |
| வல்லாரை | 50 | 30 | 50 |
| ஈரப்பலா | 100 | 160 | 100 |

# போக்குவரத்து, குடிநீர் வசதிகளின்றி பூநகரி வெட்டுக்காடு கிராம மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பரமன்கிராய் வெட்டுக்காடு கிராம. மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஏ-32 வீதியில் இருந்து வெட்டுக்காடு கிராமத்திற்கு 4 கிலோமீற்றர் வரையான வீதி மணல் வீதியாகவே காணப்படுகின்றது. இக்கிராமத்தில் வாழ்கின்ற 83 குடும்பங்கள் மழைக் காலங்களில் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் நடந்து பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பரமன்கிராய் அ.த.க. பாடசாலை, பூநகரி மகா வித்தியாலயம் என்பவற்றிற்கு வருகை தரும் மாணவர்களே நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. பிரதேச சபை குடிநீர் விநியோகத்தினை முன்பு மேற்கொண்டதாகவும் தற்போது குடிநீர் விநியோகிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிரந்தரமாக குடிநீர் வழங்குவதற்கும் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை வெட்டுக்காடு கிராமத்திற்கு பேருந்து சேவை நடத்தப்பட வேண்டும் எனவும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அச்சகத்...

படுத்தப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி கொழும்பில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## அரசின் கடுமை...

வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வங்குரோத்து நிலைமையை அறிந்துகொண்டு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பணியாற்ற வேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்குக் கூட பணம் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் பணம் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## புகையிரதம் - பஸ்...

சென்ற பேருந்து மீது ரயில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்றுக் காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகர் ரயில் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு ஊழியர்களை ஏற்றிப் பயணித்த அரச பேருந்து, ரயில் கடவையை கடக்க முற்பட்டபோது, யாழ்ப்பாணத்திலிருந்து முறிகண்டி நோக்கி பயணித்த யாழ் ராணி ரயில் பேருந்து மீது மோதியுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,100)

## மல்லாகத்தில்...

டப்பட்ட நகைகளை நேற்று பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மல்லாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் முன்னெடுத்த துரித நடவடிக்கையின் அடிப்படையில், நேற்று திங்கட்கிழமை திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வீட்டில் திருடப்பட்ட நகைகளை மீட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரை இன்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## தேர்தலை நடத்...

மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு - டெக்னிகல் சந்தியில் கூடிய ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களால் கொட்டும் மழையிலும் அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களுடன் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக குறித்த பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் டெக்னிகல் சந்தியில் சுமார் 2 மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமையினால் அவ்வழியூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸாரினால் அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்கள் செல்லவில்லை. இதனையடுத்தே ஆர்ப்பாட்டத்தினைக் கலைப்பதற்கு கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து சுமார் 4 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அங்கிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தேர்தலை நடத்துவது...

திரத்தில் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த [illegible]
நிதி ஒதுக்கீ[illegible]

னம் என திறைசேரியின் செயலாளர் ஏற்கெனவே ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

410.6 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்படும் வரை வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு வழங்க முடியாது என அரச அச்சகர் அறிவித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

தேர்தல் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொடுப்பதற்கு பொலிஸ் மா அதிபர் தவறியுள்ளதாகவும் அதற்காக செலுத்த வேண்டிய கட்டணம் 03 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு அதன் நகர்த்தல் பத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலுக்கு தேவையான வாகன எரிபொருள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு பொறுப்பான அரச நிறுவனங்களுக்கு அறிவித்துள்ள போதிலும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு இதன்போது தெரிவித்துள்ளது.

திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், அரச அச்சகம், பொலிஸ் மா அதிபர், இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோர் தேர்தலுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழு ஆவண ஆதாரங்களுடன் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. (ம-7)

## மின்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்ட பௌத்த மதத் தலைவர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் ஏனைய மதத் தலைவர்களும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தன்னிச்சையாக மின் கட்டணத்தை அதிகரித்துள்ளமை தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் வாழ்வில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதற்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## 16 பவுண்...

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று வீட்டின் உரிமையாளரான ஓய்வுபெற்ற ஆசிரியை முறைப்பாடு வழங்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டை பூட்டிவிட்டு வெளியூர் சென்றிருந்ததாகவும் வீட்டை உடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தடயவியல் மற்றும் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒற்றையாட்சியின்...

மேலும் கூறுகையில்,

"ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். பிரதான ஆளும் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் இதற்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1492
துலாம் 3 8 3 9 9 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1067
R 29 40 48 65

கொவிசெத
திகதி 2023.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 3279
T 31 38 40 47
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1385
J 11 12 21 58 70

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 346
சிம்மம் 04 31 40 56 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/20
சீட்டிழுப்பு இலக்கம் 5037
D 8 8 0 5 5 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2012 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.02.20 தினம் திங்கட்கிழமை
Q 03 13 48 68
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,383,960/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.20
சீட்டிழுப்பு இல : 4173
ரூ. 4,479,980/-
வெற்றி இலக்கங்கள் 14 32 39 64 F
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,171,820/-
திகதி 2023-02-20
வெற்றி வாரம் 3724
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 07 29 42 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,470,820/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 30 51 56 67 73
சீட்டிழுப்பு வாரம் 1188
வர்ணம் பச்சை
2023.02.20 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 307,473,004.20
DLB Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1898
சீட்டிழுப்பு திகதி 2023-02-20
வெற்றி இலக்கங்கள் 10 35 41 65 S
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பெறுதி ரூ. 40,165,582.40
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1638
சீட்டிழுப்பு திகதி : 2023.02.20
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,571,960/-
09 24 52 69 S
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வழங்கவுள்ள கடனுக்கான கால எல்லையை நீடிப்பதாக சீனா உறுதி

(கொழும்பு)

இலங்கை வழங்கவுள்ள கடனுக்கான கால எல்லையை நீடிப்பதாக சீனா நேற்று மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி இலங்கைக்கு கடன் நீடிப்பை வழங்கியுள்ளதாக சீனாவின்வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் முதற்கட்ட கடனுதவியை வழங்க சீனாவின் கடன் உத்தரவாதம் அவசியம் என வலியுறுத்தப்பட்ட நிலையில், தொடர்ந்தும் பின்னடிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் சீனாவின் கடன் மறுசீரமைப்பு ஆதரவு இல்லாமல் இலங்கைக்கான கடனை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்து வருவதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதனையடுத்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டிய கடனை நிறுத்துவதற்கான கடிதத்தை சீனா ஏற்கனவே இலங்கைக்கு வழங்கியுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இந்த காலகட்டத்தில், சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் கடன் அசல் மற்றும் வட்டியை, இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை, இது குறுகிய கால கடன் அழுத்தத்தை குறைக்க இலங்கைக்கு உதவுகிறது என்றும் சீனாவின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14654)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

வீட்டுப் பணிப்பெண் தேவை
புலோலி தெற்கு பருத்தித்துறையில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 35 - 55 வரையான வயதுடைய பணிப் பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு :-
076 027 6066
(C-6019)

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள்,ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.
நல்ல தண்ணீர், நல்ல சூழல்.
• விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
• தரகர் தேவையில்லை.
(14669)
தொடர்புகளுக்கு :- 076 690 6272

தரம் - 06 இற்கான புதிய அனுமதிகள் (2023)
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 2023ஆம் ஆண்டுக்கான தரம் 6 அனுமதி விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படுகின்றது.
பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
நன்றி
குறிப்பு :- தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த (உள்ளூர், வெளியூர்) மாணவர்கள் (பெண்கள், ஆண்கள்) விடுதியில் இலவசமாக தங்கி இருந்து கல்வி கற்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. (14675)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## நிறஞ்சினி துரைரத்தினம்

அம்மா
எம்மை விட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆனாலும் நம்ப முடியவில்லை
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அன்பு காட்ட உங்களைப் போல்
யாருமில்லை அம்மா
அழகான முகம் அன்பான உபசரிப்பு
தீர்க்கமான முடிவு அனைத்தையும்
நினைக்காத நேரமில்லை அம்மா
நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கை
இன்றில்லை
ஆண்டுகள் பல
ஓடி மறைந்தாலும்
எம் உள்ளங்களில் நீங்கள்
என்றும் நீங்காமல்
நிலைத்து வாழ்வீர்கள்.

அன்புள்ள குடும்பத்தினர்.

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-6018)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து
CHOLA INTERNATIONAL (P) LTD
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(C-6018)
V2 TRAVELS 0777-068-777

வேலை வாய்ப்பு
க.பொ.த உயர்தர சித்தியுடன் இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தின் நெல்லியடி கிளையில் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
முடிவுத் திகதி :- 25.02.2023
தொடர்புகளுக்கு :-
077 263 1426
jeyarajahu@gmail.com
(14670)

கனடா விசாக்கள்
கனடா மாணவர் விசாவினை குறுகிய காலத்தில் 100% உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள (28 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்)
074 320 8923
(14672)

CHOLA FOODS
CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
CHOLA FOODS & CIMS COLLEGE
SCHOLARSHIPS
முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்
வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு
• FOOD & BEVERAGE
• COOKERY
• HOUSE KEEPING
• FRONT OFFICE
• DIPLOMA IN HOTEL MANAGMENT
போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)
✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது
0777-068-777
(C-6017)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கலின் போது ஒளி/ஒலி சேவை வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 05.04.2023ஆந் திகதி வழமை போன்று சிறப்பாக நடைபெறவுள்ளது பொங்கல் உற்சவ காலத்தில் ஒளி/ஒலி சேவை வழங்க ஆர்வமும் இயலளவும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் தங்களது மின் பிறப்பாக்கிகளின் கொள்ளளவு சேவை வழங்கக்கூடிய ஆகக்கூடிய மின் குமிழ்களின் அளவுகள் மற்றும் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் விண்ணப்பங்களை எதிர்வரும் 04.03.2023ஆந் திகதிக்கு முன்னர் தலைவர் கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை, பரந்தன் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 0762956869/0773179847**

ஆலய பரிபாலன சபை,
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.
(C-6016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.